# அருள் ஒளி



இதழ்: 175 தை-2025

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை இலங்கை.

அம்பாள் துணை

# அருள் ஒளி

மாதாந்த சஞ்சிகை (தை ~ 2026)

ஆசிரியர்

கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்

திரு. ச. சந்தோஷன் அவர்கள்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை இலங்கை.

T.P: 021 321 3151, 021 224 1909

Email: thurkaiammantemple@mail.com

facebook: @tellidurga

பதிவு இல: ISSN 2362 - 0587


ISSN 978 - 955-23 - 0019 -3

## பாடல் பெற்ற திருக்கேதீஸ்வரத் திருத்தல சுற்றாடலை பாதுகாக்க வேண்டும்

### ஆசிரியர் உரை



ஈழ திருநாட்டில் பாடல் பெற்ற தலமாக கருதப்படும் திருக்கேதீஸ்வரம் திருக்கோவில் சுற்றாடலை என்றும் நாம் பாதுகாக்க வேண்டும். மாற்று மதத்தவர்கள் மன்னார் மாவட்டம் தமக்கே உரித்தன்று தற்போது கங்கணம் கட்டி நிக்கிறார்கள். சைவ சமயத்தவர்களின் தொன்மை வாய்ந்த வரலாற்று இடமாக கருதப்படுகின்ற மாதோட்ட துறைமுகம் சார்ந்த மன்னார் மாவட்டத்தை போர்த்துக்கேயர் கைப்பற்றிய நாள் முதல் அதனுடைய மேன்மை சிறப்பு எல்லாமே காலத்துக்கு காலம் பறிக்கப்பட்டு கொண்டிருக்கின்றது.




தற்போது இந்திய அரசாங்கம் திருக்கேதீஸ்வர திருத்தலத்தை கருங்கற்கோவிலாக மாற்றி அமைத்து சிறப்பு செய்தது. மேலும் இராமர் பாலத்தை மீண்டும் கட்டி எழுப்ப வேண்டும் என்று இந்திய அரசு அறைகூவல் விடுத்த வண்ணமாக இருக்கிறது.

இலங்கை சுற்றுலா திணைக்களம் கடந்த மாதம் மன்னார் மாவட்டத்தின் மன்னாரில் பார்க்க வேண்டிய சிறப்பு இடங்கள் என்று வரிசைப்படுத்துகின்ற போது திருக்கேதீஸ்வரம் திருத்தலத்தையும், குறிப்பாக ராமர் பாலத்தின் இருப்பிடத்தையும் சுற்றுலா பிரியாணிகள் தரிசிக்கும் வாய்ப்பு உண்டு என்பதை வெளிப்படுத்தும் முகமாக அனுமன் ராமன் சீதை மற்றும் திருக்கேதீஸ்வரத்தை மையப்படுத்தி சிவபெருமான் காட்சிப்படுத்தியதை மாற்று மதத்தவர்கள் வன்மையாக கண்டித்து சைவ அடையாளங்களை காட்சிப்படுத்துவது மத பிரச்சனையை தோற்றுவிக்கும் என்று மன்னார் பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட கடிதம் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டு இருக்கிறது. இது மிகவும் வேதனையான ஒரு விடயம்.

2000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றை கொண்ட ஈழத் தமிழர்களின் சுதேசிய மதத்திற்கு, 500 ஆண்டுகளுக்கு முன்னால் அந்நிய படையெடுப்பினால் விளைந்த புதிய மதத்தைச் சார்ந்தவர்கள் சைவ அடையாளங்கள் மன்னார் மாவட்டத்தில் இருக்கக் கூடாது என கருதுவது மிகப்பெரிய துரோகமாகும். இவ்விடயத்தில் சைவ மக்கள் மிகவும் அவதானமாக இருப்பதோடு கௌரவ இலங்கை ஜனாதிபதி மற்றும் ஏனைய சுற்றாடல் துறை சார்ந்த பொறுப்பு மிக்கவர்கள் இவ்விடயத்தில் நிதானமாக செயல்பட வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

**கலாநிதி. ஆறு. திருமுருகன்**
**ஆசிரியர் ~ அருள்ஒளி**

# சைவத்தமிழ் உலகில் சைவாதீனமாக விளங்கும் சிவத்தமிழ்ச் செல்வி முத்துவிழா காணும் பெருந்தகை

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வாழ்வியற் பணிகள் எனும் நூலில் அம்மாவின் எண்பதாவது பிறந்தநாளை முன்னிட்டு திருவாளர் ஐ. தி. சம்பந்தன் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரை மீள் பிரசுரம் ஆகிறது. எழுத்தாளருக்கும் பதிப்பகத்தாரான இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தினருக்கும் நன்றிகள்




அந்நியர் ஆட்சியால் அழிவுற்ற நிலையிலிருந்த சைவத்தையும் தமிழையும் பாதுகாத்து வாழவைத்த சைவச் சான்றோன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களே. பெரும் பணிகளாற்றிப் பாதுகாத்து வந்த சைவத்தையும் தமிழையும் பேணிப் பாதுகாத்து வருவதற்கு ஒரு நாவலர் பரம்பரையை உருவாக்கியவரும் அவரே.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, திரு. கையிலாசபிள்ளை, திரு. ந. க. சதாசிவம்பிள்ளை, திரு. அருணாசல வாத்தியார், சைவப் பெரியார் திரு. சிவபாதசுந்தரம் போன்ற பெரும் பரம்பரையின் வாரிசாக இன்று வாழ்ந்து கொண்டிருப்பவர்தான் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.



நாவலர் பெருமான் போன்று பிரமச்சாரியத்தை மேற்கொண்டு சைவத்தையும் தமிழையும் காதலித்து அரும் பெரும் தொண்டாற்றி வருபவர். நாவலர் பரம்பரையின் ஒளிச் சுடராக விளங்குபவர்.

நாவலர் வழிநின்று சைவத்தையும் தமிழையும் வளர்த்துவரும் தமிழ் அன்னை. நாவலர் பெருமான் வகுத்த சைவாகம விதிப்படி தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தை நிருவகித்து அதனூடாக சமய சமூகப் பணியாற்றி வருபவர். நாவலர் பெருமான் போன்று சமயச் சொற்பொழிவுகள் மூலம் சமயத்தை வளர்த்து வந்தவர். சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக சைவத் தமிழ் உலகில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் சைவ ஒளிச் சுடர். தமது சொற்பொழிவால், எழுத்தால், செய்கையால், அர்ப்பணிப்பால் சைவத்தின் பெருமையைத் துலங்க வைத்துக் கொண்டிருப்பவர்.

நாவலர் பெருமான் ஓர் ஆசிரியராகவிருந்து கற்றுக்கொண்ட வழிமுறைகள் மூலம் கல்விப் பணியாற்றி மக்களுக்கு சமய அறிவை ஊட்டியவர். அதேபோன்று அம்மையாரும் ஆசிரியராகவிருந்த காலத்தில் சைவசித்தாந்த ஆராய்ச்சிகளை மேற்கொண்டு சமயப் பிரசங்கங்கள் மூலம் மக்களிடையே சமய அறிவை வளர்த்தவர். நாடளாவிய உலகளாவிய ரீதியில் ஆயிரத்திற்கு மேற்பட்ட சொற் பொழிவுகளை நிகழ்த்தியவர். அதனால் சைவசமய எழுச்சியை ஏற்படுத்தியவர்.

தமிழ் நாட்டில் நடைபெற்ற சைவ மகாநாடுகள், சைவசித்தாந்த மகாநாடுகளில் பங்குகொண்டு சமய ஆராய்ச்சிக்கட்டுரைகள் வாசித்தும் சொற்பொழிவு நிகழ்த்தியும் தொண்டாற்றியவர். ஆரம்பித்த அச்சுக்கூடத்தாலும் சமயப் பணிகளினாலும் ஈழத்தமிழர்களுக்கு மதிப்பும் பெருமையும் ஏற்பட்டதுபோல் அம்மையாரும் அந்தப் பெருமையை எமக்கு ஈட்டித்தந்தவர்.

# எமது துர்க்காபுரம் மகளிர் இல்ல பிள்ளைகளுக்கு தாய் வீட்டு சீராக இதுவரை 14 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன

ஆலயம் மூலமாகவும் அறப்பணிகள் ஆற்றலாம் என்பதற்கு மிகச்சிறந்த முன்னுதாரணமாக திகழும் ஆலயம் எமது தெல்லிப்பழை துர்க்காதேவியின் சந்நிதானம் என்றால் மிகையில்லை.

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் சிறு பிள்ளைகளாக வந்து சேர்ந்தவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து அவர்களுக்கு உரிய முறையிலே கல்வியினை போதித்து, இல்லற வாழ்வில் இணையும் அந்தப் பிள்ளைகளுக்கு இலவசமாக வீடு கொடுக்க வேண்டும் என்று 2010 இல் கலாநிதி ஆறு.திருமுருகன் எடுத்த முயற்சி வீண்போகவில்லை.

தற்போது வரையில் 14 இல்லங்கள் உருவாக்கப்பட்டு இல்லத்தில் வளர்ந்து, திருமணமான பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது

துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகனாரின் சிந்தையில் தோன்றி துர்க்கா தேவியின் திருவருளுடனும் சிவத்தமிழ்ச் செல்வியின் ஆசியுடனும் இந்த பெரும்பணி செம்மையுற நடைபெறுகிறது.








# நல்லூர் சிவன் கோவில் கொடியேற்றம்

நல்லூர் சிவன் கோவில் என அழைக்கப்படும் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாதசுவாமி தேவஸ்தான மஹோற்சவம் 25.12.2025 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து திருவிழாக்கள் மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்று வருகின்றன.







# தையிட்டி விகாரை பிரச்சினையில் போராட்டக்காரர்கள் நடாத்தப்பட்ட விதம் குறித்து செஞ்சொற்செல்வர் கண்டனம்



"தையிட்டி விகாரை தொடர்பான பிரச்சினைக்கு சுமூகமான தீர்வினை ஜனாதிபதி விரைவாக எடுத்தல் வேண்டும். தவத்திரு வேலன் சுவாமிகளை கைது செய்த முறை மிகுந்த வேதனை தருகிறது" என்று அகில இலங்கை இந்து மாமன்றம் உப தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தையிட்டியில் பொதுமக்கள் நிலத்தில் அமைக்கப்பட்ட பௌத்த விகாரை தொடர்பாக தொடர்ந்து பிரச்சினைகள் அதிகரித்துள்ளது. இப்பிரச்சினையை ஆராய்ந்து உடன் தீர்வு காண வேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கு உரியது. தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் வலி வடக்கு பிரதேச சபைத் தலைவரையும் அழைத்து இப்பிரச்சினைக்கான தீர்வினை ஏற்படுத்துவது அவசியமாகும்.

போர்ச்சூழலில் உயர்பாதுகாப்பு வலயத்துள் அகப்பட்ட சைவ ஆலயங்கள் சில இன்னும் விடுவிக்கப்படாமல் உள்ளன. பலாலி விநாயகர் ஆலயம், கீரிமலை ஆதிசிவன் கோயில், சடையம்மா மடம், காங்கேசன்துறை பலாலி வீதி திருகோணச் சத்திரம், கதிரவெளி முருகன் கோவில் கடந்த 35 ஆண்டு காலமாக பூசை இல்லாமல் பக்தர்கள் சென்று வழிபாடு செய்ய முடியாமல் இருக்கிறது.

இந்நிலையில் புதிய புதிய பௌத்த ஆலயங்கள் மக்களின் நிலங்களில் உருவாக்கப்படுவது பிரச்சினைகளை அதிகரிக்குமே ஒழிய அமைதியை ஏற்படுத்தாது. சைவ மக்கள் பௌத்த மதத்திற்கு எதிரானவர்கள் அல்ல. எனவே மக்களின் மனதை வேதனைப்படுத்தாது அரசு உடன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். உங்கள் பதவிக்காலத்தில் பல விடயங்களை தீர்த்து வைப்பீர்கள்

என்று மக்கள் எதிர்பார்த்து இருந்த வேளை தையிட்டி விவகாரம் பெரும் ஏமாற்றமாக உள்ளது. தையிட்டி விடயம் தொடர்பாக அகிம்சை வழியில் நின்று எதிர்ப்புத் தெரிவித்தவர்களை கைது செய்யும் போது கையாண்ட முறை கவலைக்குரியது. குறிப்பாக தவத்திரு வேலன் சுவாமிகளை கைது செய்யும் போது கையாண்ட முறை மிக கவலையை அளிக்கிறது. எனவே இத்தகைய விடயங்கள் தொடராமல் இவ் விடயத்தில் உடன் அக்கறை செலுத்துமாறு சைவ மக்கள் சார்பில் தங்களிடம் வேண்டிக்கொள்கிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த தவத்திரு வேலன் சுவாமிகளை நேரில் சென்று கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் சுவாமிகளின் உடல் நலன் தொடர்பில் விசாரித்து ஆறுதல் கூறியமையும் குறிப்பிடத்தக்கது.குறிப்பாக தவத்திரு வேலன் சுவாமிகளை கைது செய்யும் போது கையாண்ட முறை மிக கவலையை அளிக்கிறது. எனவே இத்தகைய விடயங்கள் தொடராமல் இவ் விடயத்தில் உடன் அக்கறை செலுத்துமாறு சைவ மக்கள் சார்பில் தங்களிடம் வேண்டிக்கொள்கிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த தவத்திரு வேலன் சுவாமிகளை நேரில் சென்று கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் சுவாமிகளின் உடல் நலன் தொடர்பில் விசாரித்து ஆறுதல் கூறியமையும் குறிப்பிடத்தக்கது.



## மருதனார்மடம் சுந்தர ஆஞ்சநேயர் இரதமேறி வந்து அருள் புரிந்தார்

யாழ்ப்பாணத்தின் ஆன்மீக அடையாளங்களில் ஒன்றான மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய இரதோற்சவப் பெருவிழா 19.12.2025 (வெள்ளிக்கிழமை) வெகு விமர்சையாக நடைபெற்றது.

பக்தர்களின் ஜெய் ஸ்ரீ ராம் கோ'ங்களுக்கு மத்தியில், மேளதாளங்கள் முழங்க, ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார். அந்த பக்திப்பரவசமான தருணங்களை வார்த்தைகளால் விவரிக்க முடியாது!







# ஈழத்துக் கலைஞன் வாகீசனுக்கு பிரித்தானியாவில் கிடைக்கவுள்ள கௌரவம்




பிரித்தானிய பாராளுமன்றத்தில் 2026 இல் நடைபெறும் தைப்பொங்கல் தமிழர் மரபுரிமை விழாவில் ஈழத்துக் கலைஞன் வாகீசனின் நிகழ்ச்சி நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஈழத் தமிழினத் திற்கான பெருமையை உலக அரங்கில் எடுத்துச் சென்றவர் நம்ம பொடியன் இணுவையூர் வாகீசன். அவரது கலைப் பயணம் இன்று உள்ளூர் எல்லைகளைத் தாண்டி, சர்வதேச மேடைகளில் ஈழத்தமிழர் அடையாளத்தைப் பேச வைக்கிறது.

அதன் தொடர்ச்சியாக, 2026 ஆம் ஆண்டு பிரித்தானிய பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ள தைப்பொங்கல் தமிழர் மரபுரிமை விழாவில், வாகீசனின் நிகழ்ச்சி இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது ஈழத்தமிழ் கலைஞரொருவருக்கு கிடைத்த மிகப் பெரும் அங்கீகாரமாகவும், உலக அரங்கில் தமிழர் பண்பாட்டின் உயர்வை வெளிப்படுத்தும் தருணமாகவும் பார்க்கப்படுகிறது.

இணுவையூரில் ஒலித்த அந்தப் பாடல், ஒரு பாடலாக மட்டும் அல்லாமல், ஈழத்தமிழ் இனத்தின் பெருமையும், அடையாளமும் உலகை நோக்கி முழங்கும் குரலாக மாறியுள்ளது.

# வழித்துணையாய் வரும் முறிகண்டி பிள்ளையார்



முறிகண்டி வவுனியாவுக்கும் யாழ் நகருக்கும் இடையே ஏறக்குறைய மத்தியில் அமைந்த பிரதேசத்தில் கிளிநொச்சி நகரத்திற்கு அருகில் முறிகண்டிப் பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ளது.

இங்கு பிள்ளையார் வழித்துணைப் பிள்ளையாராக வீற்றிருக்கிறார். இவ்வாலயத்தைக் கடந்தே, வடபகுதியை அடைய முடியும். எனவே, இவ்வீதியினூடாகப் பயணிக்கும் பயணிகள், இவ்வாலயத்தில் தரித்து நின்று, பிள்ளையாரை வழிபட்ட பின்னரே, தம் பயணத்தைத் தொடருவர்.

மிகச் சிறிய ஆலயத்தில் குடி கொண்டிருக்கும் இவ் விநாயகரின் மகிமையோ பெரிது. மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி மிக்கவர். பொங்கல், சோறூட்டல் போன்ற சடங்குகளும் இங்கு நடைபெறுவதுண்டு.

அன்று தொட்டு இன்று வரை சிறியதொரு குடிலினுள்ளேயே முறிகண்டிப் பிள்ளையார் அமர்ந்துள்ளார். மூன்று வேளை பூசைகள் நடைபெறுகின்றன.

# எமது மக்களுக்கு அரும்பணி ஆற்றிய பெருமாட்டி லேடி இராமநாதன் அவர்களின் உருவச்சிலை திறந்து வைக்கப்பட்டது




யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியின் வளர்ச்சியில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாக, கல்லூரியின் முன்னாள் அதிபரும் மேலாளருமான லேடி லீலாவதி இராமநாதன் அவர்களின் உருவச்சிலை திறப்பு விழா 18-12-2025 வியாழக்கிழமை அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி அம்பிகை சிவஞானம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், வட மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். கல்லூரியின் பழைய மாணவனும், அகில இலங்கை இந்து மாமன்றத் துணைத் தலைவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் கலந்துகொண்டு உருவச்சிலையைத் திறந்து வைத்து நினைவுப் பேருரையையும் நிகழ்த்தினார். இலங்கையின் கடந்த நூற்றாண்டு கால வரலாற்றில் தமிழர்கள் பெருமையுடன் தெரிந்து வைத்திருக்க வேண்டிய விடயங்கள் பலவற்றை இந்த நாற்பது நிமிட பேச்சில் அறிந்து கொள்ள முடியும். இவ்வளவு விடயங்களையும் வாசித்து, ஆராய்ந்து, நினைவில் வைத்து பேச ஈழத்தில் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் இருப்பது தவப் பயன். எங்கள் வரலாற்றையும் பெருமைகளையும் இயன்றவரை அடுத்த தலைமுறைக்கு கடத்தும் மிகப்பெரிய பணியை தொடர்ச்சியாக செய்துவரும் ஐயா அவர்களுக்கு நீண்ட ஆயுளை ஆண்டவன் அளிக்க அனைவரும்

1909ஆம் ஆண்டு முதல் 1953ஆம் ஆண்டு வரை இராமநாதன் கல்லூரி வளாகத்திலேயே தங்கியிருந்து, இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி மற்றும் இராமநாதன் சைவப் பெண் ஆசிரிய கலாசாலை ஆகியவற்றின் மேலாளராகவும், அதிபராகவும் லேடி இராமநாதன் அரும்பணியாற்றியுள்ளார். யாழ்ப்பாணம் சைவ மங்கையர் கழகத்தின் ஸ்தாபகராகவும் தலைவராகவும் இருந்து அவர் ஆற்றிய கல்வி மற்றும் சமூகப் பணிகள் இவ்விழாவில் நன்றியுடன் நினைவு கூறப்பட்டன.

இவ்விழாவின் மற்றுமொரு சிறப்பம்சமாக, கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் பதிப்பாசிரியத்துவத்தில் உருவான ”கர்மயோகி லேடி இராமநாதன்” எனும் சிறப்பு மலரும் இதன்போது வெளியிட்டு வைக்கப்பட்டது.

அமரர்கள் லீலாவதி இராமநாதன் மற்றும் சேர் பொன் இராமநாதன் ஆகியோர் இந்த மண்ணில் மக்களுக்காக ஆற்றிய பணிகளை நன்றியோடு நினைவு கூர வேண்டிய நேரம் இது.






# வாழ்வை வளமாக்கும் கோமாதா வழிபாட்டின் சிறப்புகள்



இந்து தர்மத்தில் பசு என்பது வெறும் விலங்கல்ல் அது முப்பத்து முக்கோடி தேவர்களும் குடிகொண்டிருக்கும் ஒரு நடமாடும் தெய்வம். பொன்னுக்கும் பொருளுக்கும் மதிப்பற்ற காலத்திலேயே ஒருவருடைய செல்வச் செழிப்பை அவர் வளர்க்கும் பசுக்களைக் கொண்டே உலகம் மதிப்பிட்டது. அதன் காரணமாகவே "செல்வம்" என்ற பொருளில் பசுக்களை "மாடு" என்று நம் முன்னோர் அழைத்தனர். "கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு மாடு அல்ல மற்றை யவை" என்று வள்ளுவர் பாடியதும் இத்தகைய மேன்மையான பொருளை உள்ளடக்கியே ஆகும். ஒரு பசு கன்று ஈனும் தருணம் என்பது மிக உன்னதமானது. கன்று வெளிப்படும் போது அதன் தலை மற்றும் முன்னங்கால்கள் தெரியும் நிலையை "உபயதோமுகி" என்று அழைப்பார்கள். அந்த வேளையில் பசுவை வலம் வந்து வணங்குவது, தங்களுக்குத் தீராத மனக்குறைகளையும் தீர்க்கவல்லது என்பது ஐதீகம். கன்று ஈன்ற பசுக்களுக்குப் புல், புண்ணாக்கு போன்ற உணவுகளை அளித்து வழிபடுவதன் மூலம், வராத கடன்களும் வந்து சேரும் என்பது நம்பிக்கை.


ஆன்மீக ரீதியாக பசுவின் உடலானது அனைத்துப் புண்ணிய நதிகளும், சமுத்திரங்களும், தேவர்களும் உறையும் இடமாகக் கருதப்படுகிறது. குறிப்பாக பசுவின் பிருஷ்ட பாகத்தில் மகாலட்சுமி வாசம் செய்வதால், விஸ்வரூப தரிசனத்தின் போது பகவானும் மகாலட்சுமியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வது போல பசுவின் பின் பகுதியைச் சந்நிதி நோக்கி நிறுத்துவது வழக்கம். தீய கனவுகள், கிரக தோஷங்கள் மற்றும் தீராத நோய்களால் அவதிப்படுபவர்கள் பசுக்களை வழிபடுவதன் மூலமும், கோதானம் செய்வதன் மூலமும் அப்பீடைகளிலிருந்து விடுபடலாம். ஒருமுறை திலீப மகாராஜன் தேவேந்திரனின் மாயையால் மறைக்கப்பட்ட அசுவமேதக் குதிரையை, கோமியத்தால் தன் கண்களைக் கழுவிய பின்னரே கண்டடைந்தார் என்பது புராண வரலாறு. பசுவின் பாதம் பட்ட மண் புனிதமானதாகக் கருதப்படுகிறது. ரகு, தசரதர் போன்ற பெரும் மன்னர்கள் கூட பசுவின் கால் துகள்களைத் தலையில்

தாங்கினர். காலையில் எழுந்தவுடன் பசுவைத் தரிசிப்பதும், யாருடனும் பேசாமல் அதற்கு அகத்திக் கீரை அல்லது ஒரு பிடி புல் வழங்குவதும் மகப்பேறு இல்லாதவர்களுக்குக் கூட நல்ல பலனைத் தரும்.

அறிவியல் ரீதியாகவும் பசுவின் கொடைகள் ஈடு இணையற்றவை. தாய்ப்பால் கிடைக்காத குழந்தைகளுக்குப் பசும்பால் ஒரு உயிர்ப்பாலாக அமைகிறது. இது இட்லியை விடவும் எளிதில் செரிமானம் ஆகக்கூடிய ஆற்றல் கொண்டது. பசுவின் நெய் கொழுப்புச் சத்து குறைவாக இருப்பதோடு, யாகங்கள் மற்றும் விளக்கேற்றப் பயன்படுத்தப்படும் போது கிருமிநாசினியாகச் செயல்படுகிறது. பசுஞ்சாணி கிருமிநாசினியாக மட்டுமின்றி, பில்லி, சூனியம் போன்ற தீய சக்திகளிடமிருந்து வீட்டைப் பாதுகாக்கும் அரணாகவும் திகழ்கிறது. நவீன மருத்துவ உலகமே வியக்கும் வண்ணம், பசுவின் கோமியம் புற்றுநோய் போன்ற கொடிய நோய்களைக் குணப்படுத்தும் அருமருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. புதிய மனைகளில் வாஸ்து தோ'ங்கள் நீங்கவும், ஆலயக் குடமுழுக்கு நிகழ்வுகளிலும் சாணி மற்றும் கோமியம் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன.

உலகில் உள்ள உயிரினங்களிலேயே தனக்கென வாழாது பிறருக்கென வாழும் தியாகப் பண்பு பசுவிற்கே உரியது. நாம் உண்ணாது கழிக்கும் தவிடு, வைக்கோல் போன்றவற்றை உண்டு, நமக்குச் சத்து நிறைந்த பாலையும் ஆரோக்கியத்தையும் வழங்குகிறது. இத்தகைய சாந்த குணம் கொண்ட பசுவைச் சித்திரவதை செய்யாமல், அவை பால் தருவதை நிறுத்திய பின்னரும் அடிமாடாக விற்காமல், இயற்கை மரணம் வரை பராமரிப்பதே சிறந்த தர்மமாகும். தினமும் கோபூஜை செய்பவர்கள் மகாவி'ணுவின் அருளைப் பெற்றுச் சகல சௌபாக்கியங்களுடன் வாழ்வார்கள் என்பது திண்ணம். அன்னை புவனேஸ்வரியின் சொரூபமாக விளங்கும் கோமாதாவை வணங்கிப் போற்றுவது மனித குலத்திற்கு அமைதியையும் மேன்மையையும் அள்ளித்தரும்.





# தென்னை, கமுக மரங்கள் நாட்டப்பட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் பசுமைப் புரட்சி

தெல்லிப்பழை அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மேற்குப் பக்கக் காணியில் பசுமை மற்றும் தன்னிறைவை நோக்காகக் கொண்ட புதிய மரநடுகை நிகழ்வு கடந்த 02.01.2026 அன்று காலை 8.00 மணியளவில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இப்புண்ணிய நிகழ்வை தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஐயா அவர்கள் மங்கலமான முறையில் ஆரம்பித்து வைத்தார். இதன்போது அதிகளவிலான தென்னை மற்றும் கமுகு (பாக்கு) மரக்கன்றுகள் ஆலய நிலத்தில் நடுகை செய்யப்பட்டன.



இந்த மரநடுகைத் திட்டமானது ஒரு தொலைநோக்குச் சிந்தனையின் தொடர்ச்சியாகவே முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே சில ஆண்டுகளுக்கு முன்னர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களது வழிகாட்டலில் ஆலய வளவில் நடுகை செய்யப்பட்ட தென்னை மரங்கள் இன்று செழித்து வளர்ந்து, காய்த்துக் குலுங்குவது கண்கொள்ளாக் காட்சியாக உள்ளது.

அந்த மரங்கள் தற்போது ஆலயத்தின் நாளாந்த பூசை வழிபாடுகள் மற்றும் ஏனைய தேவைகளுக்கான தேங்காய்ப் பூர்த்தியை தடையின்றி வழங்கி வருகின்றன. சந்தையில் தேங்காயின் விலை அதிகரித்து வரும் சூழலில், ஒரு ஆன்மீகத் தலம் தனது வளங்களைப் பயன்படுத்தி சுயசார்பு பொருளாதாரத்தை எட்டியிருப்பது பாராட்டுக்குரியது.





ஆலயங்களின் நிலங்கள் வெறும் தரிசு நிலங்களாக விடப்படாமல், அவை பயனுள்ள மரங்கள் நிறைந்த சோலைகளாக மாற்றப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கத்தை இந்த நிகழ்வு பிரதிபலிக்கிறது. இம்முறை நடுகை செய்யப்பட்டுள்ள தென்னை மற்றும் கமுகு மரக்கன்றுகளும் எதிர்காலத்தில் ஆலயத்தின் தேவைகளை நிறைவு செய்வதுடன், சூழலுக்கு குளிர்ச்சியையும் அழகையும் தரும் என்பதில் ஐயமில்லை. ஆன்மீகப் பணியுடன் சமூக மற்றும் சூழலியல் மேம்பாட்டையும் இணைத்துச் செயற்படும் துர்க்காதேவி தேவஸ்தானத்தின் இந்த முயற்சி ஏனைய ஆலயங்களுக்கும் சிறந்ததொரு முன்மாதிரியாகத் திகழ்கிறது.





நாவலர் பெருமான் ஓர் ஆசிரியராகவிருந்து கற்றுக்கொண்ட வழிமுறைகள் மூலம் கல்விப் பணியாற்றி மக்களுக்கு சமய அறிவை ஊட்டியவர். அதேபோன்று அம்மையாரும் ஆசிரியராகவிருந்த காலத்தில் சைவசித்தாந்த ஆராய்ச்சிகளை மேற்கொண்டு சமயப் பிரசங்கங்கள் மூலம் மக்களிடையே சமய அறிவை வளர்த்தவர். நாடளாவிய உலகளாவிய ரீதியில் ஆயிரத்திற்கு மேற்பட்ட சொற் பொழிவுகளை நிகழ்த்தியவர். அதனால் சைவசமய எழுச்சியை ஏற்படுத்தியவர்.

தமிழ் நாட்டில் நடைபெற்ற சைவ மகாநாடுகள், சைவசித்தாந்த மகாநாடுகளில் பங்குகொண்டு சமய ஆராய்ச்சிக்கட்டுரைகள் வாசித்தும் சொற்பொழிவு நிகழ்த்தியும் தொண்டாற்றியவர். ஆரம்பித்த அச்சுக்கூடத்தாலும் சமயப் பணிகளினாலும் ஈழத்தமிழர்களுக்கு மதிப்பும் பெருமையும் ஏற்பட்டதுபோல் அம்மையாரும் அந்தப் பெருமையை எமக்கு ஈட்டித்தந்தவர்.




சமய நூல்கள் பலவற்றை வெளியிட்டு சமயத் தத்துவங்களை மக்கள் கற்றுக்கொள்ள வழிசெய்தவர். சைவசித்தாந்தத் தத்துவங்களை இலகு தமிழில் அறிய வாய்ப்பளித்தவர். தமிழ்ப் பெண்களின் பெருமையை உலகிற்கு எடுத்துக்காட்ட அம்மையாரின் 77ஆவது பிறந்த நாள் பரிசாக வெளியிடப்பட்ட □பெண்மைக்கு இணையுண்டோ? என்னும் நூல் தமிழ்ப் பெண்களின் நல்வாழ்வுக்கான கருவூலமாகும். சுமார் 50 நூல்களை ஆராய்ந்து எழுதிய அருமையான நூல் சங்க காலப் பெண்மை. வள்ளுவர் காட்டியபெண்மை, இளங்கோ காட்டிய பெண்மை, சேக்கிழார் காட்டிய பெண்மை, கச்சியப்பர் காட்டிய பெண்மை, கம்பர்காட்டிய பெண்மை, பரம் சோதி முனிவர்காட்டிய பெண்மை, பாரதி காட்டிய பெண்மை, பிற்காலப்பெண்மை, ஆகியன இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.



அக்காலத்து சைவத் தமிழ்ப் பெண்கள் சமய வளர்ச்சியிலும் குடும்ப நலன் பேணுவதிலும் கணவனைத் தெய்வமாக மதிப்பதிலும் எந்த அளவிற்கு முன்னின்றார்கள் என்பதை இந்நூல் எடுத்துக் கூறுகிறது. புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ்ப் பெண்கள் நிச்சயம் படிக்கவேண்டியநூல், காலத்தின் தேவையையொட்டி வெளியான நூலாகும். இவ்வாறு பல்வேறு பணிகளாலும் சைவத் தமிழ் உலகில் ஒரு சைவாதீனமாக விளங்குகின்றார் சிவத் தமிழ்ச்செல்வி தங்கம்மா அவர்கள்.

அந்நியர் ஆட்சியின் அடக்குமுறையின் போது தனிமனிதனாக நின்று சைவத்தையும் தமிழையும் நாவலர் பெருமான் எவ்வாறு பாதுகாத்தாரோ அதேபோன்று சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி அவர்களும் கடந்த 20 வருட போர்ச் சூழலிலும் இலங்கை அரச படைகளின் அட்டகாசத்தின் மத்தியிலும் சைவத்தையும் தமிழை யும் இரு கண்கள்போல் பேணிப் பாதுகாத்துவந்தவர். எந்த நெருக்கடியிலும் வயது முதிர்ந்த நிலையிலும் துர்க்கை அம்மன் ஆலயத்திலிருந்து சமயத்தை வளர்த்து வருபவர். சமூகப் பணியாற்றி வருபவர். அனாதைப் பிள்ளைகளுக்கு அனாதை இல்லம் அமைத்து ஆதரவளித்து வருபவர்.

நாவலர் பெருமான் வாழ்ந்த மண்ணிலிருந்து சுமார் 60 ஆண்டு களுக்கு மேலாக சைவத் தமிழ்ப் பணியாற்றிவரும் அம்மையார் அகவை எண்பதிலும் தளர்வின்றிப் பணியாற்றத் துணைநிற்பது துர்க்கை அம்பாளின் திருவருளே.

அம்மையாரின் 80ஆவது பிறந்த நாள் (07-01-2005) சைவ உலகின் முக்கிய நாளாகக் கருதப்படுகிறது. எமக்கென்று ஒரு அரசு இன்று இருந்தால் அம்மையாருக்கு முத்திரை வெளியிட்டு அவரது முத்து

விழாவை தேசிய விழாவாகக் கொண்டாட வழிசெய்திருக்கும். அப்படியொரு நிலை ஏற்பட இந்நன்னாளில் சைவாலயங்களில் நடைபெறவுள்ள பிரார்த்தனைகளில் தமிழர்களுக்கு ஒரு தாயகம் உருவாக வேண்டிப் பிரார்த்திப்போமாக.

எமக்கு ஒரு சுதந்திர நாடு இல்லையென்றாலும் சைவத் தமிழ் உலகெங்கும் முத்துவிழா கொண்டாடப்படவிருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். ஐரோப்பிய நாடுகளில் அம்மையாரின் முத்து விழாவைச் சிறப்புடன் கொண்டாடப் பிரித்தானிய சைவமுன்னேற்றச் சங்கம் உந்து சக்தியாக இருந்துவருவது மகிழ்ச்சியான செய்தியாகும். அதேபோன்று கனடாவில் சைவ அமைப்புகளும் குறிப்பாகக் கனடா சைவசித்தாந்த மன்றம் அம்மையாருக்கு சிறப்பு மலர் வெளியிட்டு முத்துவிழாவைச் சிறப்புடன் கொண்டாட விரிவான ஏற்பாடு செய்துள்ளனர். இதே போன்றே ஏனைய நாடுகளிலும் முத்துவிழா சிறப்புடன் நடைபெறவுள்ளன.

நாவலர் பெருமான் தான் வாழும்போது தமது பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஒரு பரம்பரையை உருவாக்கியிருந்தார். அம்மையாரும் தமது பணிகளைத் தொடர்வதற்கு சிலரை உருவாக்கி வருகின்றார். அவர்களில் முதன்மையானவராக விளங்குபவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள். அவரும் ஒரு பிரமச்சாரியாக இருந்து அம்மையாரின் வழிநின்று சைவத்தமிழ்ப் பணியாற்றிவருகின்றார். அன்று அம்மையார் உலகநாடுகள் பலவற்றிற்குச் சென்று சமயச்சொற்பொழிவு ஆற்றியதுபோல் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களும் சிறப்புடன் அப்பணியைச் செய்து வருகின்றார்.

இவ்வாறு ஈழத்தில் மட்டுமன்றி சைவத்தமிழ் உலகெல்லாம் சைவமும் தமிழும் தழைத்தோங்க மூலவேராக செயற்பட்டுவரும் அம்மையார் அகவை எண்பதிலும் தளர்வின்றி உற்சாகத்துடன் பணியாற்றத் தோன்றாத்துணையாக திருவருள் பாலித்துக் கொண்டிருப்பவள் அவரது குலதெய்வமாகிய துர்க்கை அம்பாளே.

முத்துவிழா காணும் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து சைவத் தமிழ்ப் பணியாற்ற துர்க்காதேவியின் திருவருள் கிடைக்க வேண்டிப் பிரார்த்திப்போம்

ஐ. தி. சம்பந்தன் ~ ஆசிரியர்
சுடரொளி இதழ், இலண்டன்

# ஈழத்து மண்ணின் புகழ்பெற்ற ஓவியரும், சிற்பியுமான ரமணி அவர்களுக்கு இதய அஞ்சலி



யாழ்ப்பாணத்து மண்ணின் கலைப் பாரம்பரியத்தை தத்ரூபமான சிற்பங்களாகவும், உயிரோட்டமுள்ள ஓவியங்களாகவும் செதுக்கிய மாபெரும் கலைஞன் ரமணி என்கின்ற வைத்தீஸ்பரன் சிவசுப்பிரமணியம் அவர்கள் 29.12.2025 அன்று இறையடி சேர்ந்த செய்தி கலை ரசிகர்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அளவெட்டி மண்ணில் பிறந்த இவர், தனது ஆரம்பக் கல்வியை ஸகந்தவரோதயா கல்லூரியில் பயின்றவர். கலை மீதான ஆர்வம் இவரை ஓவியர் அளவெட்டி ஆதவன் பொன்னம்பலம் அவர்களிடம் ஆற்றுப்படுத்தியது. அவரிடம் பயின்ற ஆரம்பப் பாடங்களே, பிற்காலத்தில் ஈழத்தின் தலைசிறந்த சிற்பிகளில் ஒருவராக ரமணி அவர்கள் உருவெடுக்க அடித்தளமிட்டன. ரமணி அவர்களின் கைகள் வெறும் களிமண்ணையோ, கல்லையோ செதுக்கவில்லை மாறாக வரலாற்று நாயகர்களுக்கு மீண்டும் உயிர் கொடுத்தன. அவர் உருவாக்கிய சிலைகள் இன்று ஈழத்தின் அடையாளங்களாகத் திகழ்கின்றன.

- நாவலர் பெருமானின் கம்பீரமான திருவுருவம்.
- அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சாந்தம் தவழும் திருவுருவம்.
- சேர். பொன். இராமநாதன், கந்தையா உபாத்தியாயர் மற்றும் டாக்டர் சுப்பிரமணியம்ʺ. ஞ போன்றோரின் தத்ரூபமான சிலைகள்.

போன்ற பெரியார்களின் உருவச்சிலைகள் யாவும் இவரது கலைப் படைப்பே. இவை வெறும் உருவங்கள் அல்ல, அந்தந்த ஆளுமைகளின் குணாதிசயங்களையும் மன உணர்வுகளையும் பிரதிபலிக்கும் கலைப்படைப்புகள்.

சிற்பக்கலையில் மட்டுமன்றி, ஓவியத்துறையிலும் இவர் முத்திரை பதித்தவர். ஈழத்து இலக்கிய உலகில் பலரது நூல்களின் முகப்பு ஓவியங்களை வரைந்து, அந்த நூல்களுக்கு ஒரு கலைத்துவமான பெறுமதியைச் சேர்த்த பெருமை இவருக்கு உண்டு. இவரது கோடுகளும் வர்ணங்களும் எளிமையையும் ஆழத்தையும் ஒருசேரக் கொண்டிருந்தன.

தன்னலமற்ற கலைச் சேவையால் மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்த ரமணி அவர்களின் மறைவு, ஈழத்து நுண்கலைத் துறைக்கு ஒரு பேரிழப்பாகும். அவர் உருவாக்கிய சிலைகள் காலத்தை வென்று நின்று, வரும் தலைமுறைக்கு அவரது பெயரைச் சொல்லிக்கொண்டே இருக்கும்.

”கலைஞன் இறப்பதில்லை அவன் படைப்புகளின் வழியே காலமெல்லாம் வாழ்ந்துகொண்டே இருப்பான்.”

அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் கலை ஆர்வலர்களுக்கும் ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் திருவாதவூரடிகள் புராணப் படிப்பு பூர்த்தி



ஈழத்தின் ஆன்மீகப் புண்ணிய பூமியாகத் திகழும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், வழிபாட்டுத் தலமாக மட்டுமன்றி, சைவத் தமிழ்ப் பண்பாட்டையும் ஆன்மீக விழுமியங்களையும் பாதுகாத்துப் பேணும் ஒரு கலைக்கூடமாகவும் விளங்கி வருகின்றது. குறிப்பாக, சைவப் பெருமக்களின் பொக்கி'மாகக் கருதப்படும் பன்னிரு திருமுறைகளையும் அச்சேற்றி, அவற்றை ஏனைய ஆலயங்களுக்கு இலவசமாக வழங்கி வரும் இத்தலத்தின் திருப்பணி அளப்பரியது.

இத்தகைய உயர்ந்த நோக்கம் கொண்ட தேவஸ்தானத்தில், பக்தர்களின் மனதைப் பக்குவப்படுத்தும் வகையில் பல்வேறு புராணப் படிப்புக்கள் தொடர்ச்சியாகவும் கிரமமாகவும் நடைபெற்று வருவது மரபாகும். அந்த வகையில், கடந்த மார்கழி மாதத்தில் மாணிக்கவாசகப் பெருமானின் பெருமைகளை எடுத்தியம்பும் "திருவாதவூரடிகள் புராணப் படிப்பு" மிகவும் சிறப்பாக நடைபெற்றது. சிவபெருமானால் "தென்னவன் பிரம்மராயன்" எனப் போற்றப்பட்டு, நரியைக் குதிரையாக்கியும், பிட்டுக்கு மண் சுமக்கச் செய்தும் ஈசனிடம் திருவிளையாடல் கண்ட மணிவாசகரின் வாழ்வியலை எடுத்துரைக்கும் இப்புராணப் படிப்பு, மார்கழி மாதத்தின் பக்தி மணம் கமழும் சூழலில் பக்தர்களுக்குப் பெரும் மனநிறைவை அளித்தது. திருவெம்பாவை காலப்பகுதியோடு இணைந்து இப்புராணப் படிப்பு பூர்த்தியடைந்தது, சிவநாமம் எங்கும் ஒலிக்கச் செய்ததோடு, சைவ நெறியின் ஆழமான தத்துவங்களை இளைய தலைமுறைக்கும் கொண்டு சேர்க்கும் ஒரு ஆன்மீகத் திருவிழாவாக அமைந்தது.

# நாவற்குழியில் பொழிந்த திருவாசகத் தேன் மழை

யாழ்ப்பாணம் நாவற்குழியில் அமைந்துள்ள திருவாசக அரண்மனையில், சிவபூமி அறக்கட்டளையின் நேர்த்தியான ஏற்பாட்டில் ”திருவாசக விழா - 2026” நிகழ்வானது கடந்த 03.01.2026 சனிக்கிழமை மாலை 3.00 மணியளவில் மிகவும் எழுச்சியுடனும் பக்திப் பரவசத்துடனும் நடைபெற்றது.



மகிமை மிக்க மார்கழி மாதத்தில் மாணிக்கவாசகப் பெருமான் அருளிய திருவாசகத்தின் சிறப்பைப் போற்றும் வகையில் அமைந்த இந்நிகழ்வு, செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களின் தலைமையில் இனிதே ஆரம்பமானது. இவ்விழாவிற்கு அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரிலிருந்து வருகை தந்த இதய வைத்திய நிபுணர் வை. மனோமோகன் மற்றும் வைத்திய நிபுணர் மனோமோகன் அரவிந்த் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

திருவாசக அர்ப்பண நிகழ்வுகளில் சிட்னியிலிருந்து வருகை தந்த வைத்தியகலாநிதி சிவரதி கேதீஸ்வரன், மற்றும் அவர்களுடைய பிள்ளைகள் இணைந்து தேனிலும் இனிய திருவாசகத்தை பாடினர். அதேபோல இசை ஆசிரியர் திருமதி பு‘பலட்சுமி உமாசங்கர், விரிவுரையாளர் திரு. குகேந்திரன் அனு‘ன், செல்வி தர்மிதா ஆனந்தரத்தினம் ஆகியோர் இணைந்து திருவாசகப் பாடல்களை இனிமையாக பாடினார்கள்.

அத்துடன், உடுவில் நாட்டிய கலாநேந்திரா மாணவர்களால் வழங்கப்பட்ட திருவாசக நாட்டிய அர்ப்பணமானது காண்போரைக் கவரும் வகையில் அமைந்திருந்தது.

இந்த ஆன்மீகச் சங்கமத்தைக் காண்பதற்கும் திருவாசகத் தேனைப் பருகுவதற்கும் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலிருந்தும் பெருமளவிலான பக்தர்கள் மற்றும் கலை ஆர்வலர்கள் திரண்டு வந்து கலந்துகொண்டமை விழாவிற்கு மகுடம் சூட்டுவது போல் அமைந்தது. சிவபூமி குடும்பத்தினரின் அர்ப்பணிப்பான உழைப்பினால் இந்த விழா ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகப் பதிவாகியுள்ளது.











# சிறப்பாக நடைபெற்ற சிவத்தமிழ்ச் செல்வியின் 101 ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா




ஈழத்துச் சைவப் புலத்தில் ஆன்மீகச் சுடராகவும் சமூகச் சீர் திருத் தவாதியாகவும் வாழ்ந்து மறைந்த சிவத்தமிழ்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 101-வது பிறந்தநாள் மற்றும் அறக்கொடை விழா, 2026 ஜனவரி 7-ஆம் நாள் தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் மிக விமரிசையாக நடைபெற்றது. சைவமும் தமிழும் தழைத்தோங்க ஓர் அவதாரமாகத் தோன்றிய அன்னையார், 1925-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ஆம் நாள் அப்பாக்குட்டி தம்பதிகளின் இல்லறம் பெருமைபெறப் பெண்மகவாக அவதரித்தார். அம்பாள் அருளோடு பிறந்த அந்தத் தங்க நிறத்து மகளுக்குத் “தங்கம்மா“ என்று பெற்றோர் நாமம் சூட்டினர். அறமும் ஆன்மீகமுமே தனது வாழ்வின் உயிர் மூச்சு என்ற உயரிய சிந்தனையோடு, எண்ணற்ற மனித உயிர்களின் வாழ்விற்கு நல்வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் எங்கள் அன்னை.

ஒவ்வொரு ஆண்டும் அன்னையாரின் பிறந்தநாளில் சமூகத்திற்கும் சமயத்திற்கும் ஒப்பற்ற தொண்டாற்றிய சான்றோர்களைக் கௌரவிப்பது வழக்கமாகும். அந்த வகையில் இந்த ஆண்டு, வரலாற்றுத்துறை தகைசார் பேராசிரியர் கலாநிதி சமாதிலிங்கம் சத்தியசீலன், மிருதங்க வித்துவான் மாரிமுத்து சிதம்பரநாதன், இளைப்பாறிய அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம், இளைப்பாறிய கூட்டுறவு மாவட்ட உதவி ஆணையாளர் திரு. எல்லுப்போலை சின்னத்தம்பி மற்றும் தவில் வித்துவான் சுருளிச்சாமி இராமதாஸ் ஆகிய ஐவருக்கும் சிவத்தமிழ்செல்வி அறநிதியச் சபை சார்பில் மிக உயரிய விருதான “சிவத்தமிழ் விருது“ வழங்கி கௌரவிக்கப்பட்டது.



கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்தச் சிறப்பான நிகழ்வில், வைத்திய கலாநிதி சி. ரகுராமன் தம்பதிகள் பிரதம விருந்தினர்களாகவும், விரிவுரையாளர் இ. சர்வேஸ்வரா தம்பதிகள் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டு விழாவிற்குப் பெருமை சேர்த்தனர். ஆலயப் பிரதம குருக்களும், ஆன்மீகச் சுடர் தெண்டுநாத சுவாமி அவர்களும் ஆசிச் செய்திகளை வழங்கினர். விழாவின் முக்கிய அங்கமாக, தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைக்கும் தெல்லிப்பழை கோட்டத்தில் உள்ள உதவி தேவைப்படும் மாணவர்களுக்கும் தாராளமாக அறக்கொடைகள் வழங்கப்பட்டன.

பெருமளவிலான அன்பர்கள் மற்றும் அடியார்கள் கலந்துகொண்டு சிறப்பித்த இவ்விழா, அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் காட்டிய அறநெறியும் சைவத் தமிழும் என்றும் நிலைபெற்று நிற்கும் என்பதை உறுதிப்படுத்தியது.

















# எமது நாட்டுப்புறப் பாடலுக்காக தேசிய விருது வென்றார் இசைக் கலைஞர் பத்மயன்




இலங்கை இசைத்துறையின் மிக உயரிய கௌரவமான அரச இசை விருதுகள் வழங்கும் விழாவில், கலைஞர் சிவானந்தம் பத்மயன் அவர்கள் முக்கிய விருதுகளை வென்று ஈழத்து கலைப்பரப்பில் ஒரு புதிய சரித்திரத்தைப் படைத்துள்ளார். எமது மண்ணின் ஆழமான உணர்வுகளையும் கிராமியத் தொனியையும் சுமந்து வந்த "கண்ணம்மா" எனும் நாட்டுப்புறப் பாடலுக்காக இந்த உயரிய அங்கீகாரம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

சிறந்த மெல்லிசை மற்றும் இசையமைப்பு, சிறந்த நாட்டுப்புற இசையமைப்பு ஆகிய பிரிவுகளில் அவர் இந்த விருதுகளைத் தட்டிச் சென்றுள்ளார். ஒரு படைப்புக்கு ஒரே நேரத்தில் இத்தகைய கௌரவங்கள் கிடைப்பது என்பது அபூர்வமான ஒன்று. இந்தப் பாடலில் அவர் கையாண்டுள்ள இசை நுணுக்கங்கள், நாட்டுப்புற இசையின் ஆன்மா சிதையாமல் அதனை நவீன காலத்திற்கு ஏற்ப செதுக்கிய விதம் மெச்சத்தக்கது.

இந்த அங்கீகாரத்திற்குப் பின்னால் பத்மயன் அவர்களின் பல ஆண்டுகால அயராத உழைப்பும், இசையின் மீதான தீராத காதலும் மறைந்திருக்கிறது. மெல்லிசையின் இனிமையையும், நாட்டுப்புற இசையின் இயல்பையும் ஒருசேரக் கோர்த்து அவர் உருவாக்கிய "கண்ணம்மா", இன்று தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்டு ஒட்டுமொத்த கலை உலகிற்கும் பெருமை சேர்த்துள்ளது.
மண்ணின் கலையை நேசிக்கும் ஒரு கலைஞனுக்குக் கிடைத்திருக்கும் இந்த மகுடம், அவரது நீண்ட கலைப்பயணத்திற்கான ஒரு உன்னதமான சாட்சியமாகும். இந்த வெற்றி இன்னும் பல படைப்புகளை உருவாக்க அவருக்கு உந்துதலாக அமையட்டும். இலங்கையின் இசைப் பாரம்பரியத்தை உலகளாவிய ரீதியில் கொண்டு செல்லும் உன்னத பணியில் மேலும் பல சாதனைகளைப் புரிய சிவானந்தம் பத்மயன் அவர்களுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.